

தமிழக முதல்வர் மாண்புமிகு.
மு.க. ஸ்டாலின்
அவர்களை
அவர்கள் இல்லத்தில்
சந்தித்து வாழ்த்துக்களை
தெரிவித்த போது...

திருவள்ளுவர் ஆண்டு 2052 ஹூ- வைகாசி
ஜூன்2021

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

ரூ. 8.00

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களை அவர்கள் இல்லத்தில்
சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்த போது...
அருகில் நீர்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள்



தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு க. பொன்முடி அவர்களுக்கு
வாழ்த்துக்கள் தெரிவித்தபோது...

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2052	மாதம் : தை –ஆனி
மலர் : 35	இதழ் : 1 – 6

இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற நிலை உருவாகட்டும்!

நெருக்கடி நிலை என்னும் நெருப்பாற்றைக் கடந்து சோதனைகள் பலவற்றையும் சாதனைகளால் வென்றெடுத்துப் பொது வாழ்வில் புடம் போட்டப் பொன்னாகத் தம்மைப் பக்குவப்படுத்தி சட்டமன்ற உறுப்பினராக, சென்னை மாநகராட்சி மேயராக, துணை முதல்வராக, படிப்படியாக தம்மை உழைப்பால் உயர்த்திக்கொண்டு இன்று தமிழகத்தின் முதல்வராக மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தம் பொற்கால ஆட்சியைத் தொடங்கி உள்ளார்.

15 ஆம் வயதில் தம் பொதுவாழ்வுப் பயணத்தைத் தொடங்கி, விழுப்புண்களை எல்லாம் விருதுகளாக்கி இந்தியாவின் மிகச் சிறந்த ஆளுமையாக தமிழகத்தினை உயர்த்திப் பிடித்துக் கோடிக்கணக்கான தமிழ் உள்ளங்களில் நிரந்தரமாய் வாழ்ந்து கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் கலைஞரின் ஒட்டுமொத்த ஆளுமையை உள்வாங்கிக் கொண்டு தமிழகத்தின் 16ஆவது சட்டப்பேரவையின் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் தம் நல்லாட்சிப் பயணத்தைத் தொடங்கி உள்ளார்.

கொரானாவின் கோரப்பிடியில் உலகம் அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்ற தருணத்தில் கடுமையான சவால்களை எதிர்கொண்டு தம் ஆட்சிப் பயணத்தைத் தொடங்கி உள்ளார்.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று புறநானூறு கூறும்.

"உயிர் எலாம் உறைவதோர் உடம்புமாயினான்" என்று கம்பன் தசரதனைப் பற்றிக் கூறுவான்.

மக்கள் எல்லாம் உயிராகவும், மன்னன் மக்கள் என்னும் உயிரைத் தாங்கி நிற்கின்ற உடம்பாகவும் மாறினான் என்று தசரதனைக் கம்பன் கூறுவது போல, கொரானா காலத்தில் தமிழக மக்களின் உயிரைக் காப்பாற்றுகின்ற போரில் போர்க்கால அடிப்படையில் ஓய்வின்றிச் சுற்றிச் சுழன்று மிகத் தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

உலகமே கொரனா வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றது. தமிழகத்தின் பிஞ்சு மழலைகள் கூடத் தங்கள் சேமிப்புப் பணத்தை முதலமைச்சர் நிவாரண நிதியாக வழங்கியதும், சிறுவன் ஹரீஸ் வர்மன் தான் சைக்கிள் வாங்க வைத்திருந்த சேமிப்புப் பணத்தை முதல்வர் கொரானா நிவாரண நிதிக்கு வழங்கிய செயலும் நம்மை நெகிழ வைக்கின்றன.

இந்நிலையில் நமது ஆதீனக் கல்வி அறக்கட்டளை சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் கொரனா நிவாரண நிதிக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்கி உள்ளோம்.

மேலும் நமது ஆதீனம் சார்பில் 1.60 இலட்ச ரூபாய் மதிப்பில் வாங்கிய இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டிக் கருவிகளை தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்ட

ஆட்சித்தலைவர் ப.மதுசூதனன் ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு வழங்கி உள்ளோம்.

காரைக்குடியைச் சேர்ந்த சிங்கப்பூர் வாழ் மருத்துவ மாணவி ஹிரண்யா தம் நண்பர்கள், உறவினர்களிடம் நிதி திரட்டி வாங்கிய இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டிக்கருவிகளை நாமும் சிவகங்கை மாவட்ட இந்திய செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து காரைக்குடி அரசு பொது மருத்துவமனைக்கு வழங்கியுள்ளோம்.

கொரானாவை எதிர்த்து ஒட்டு மொத்த மனித குலமும் போராட வேண்டிய தருணம் இது. முகக் கவசம் அணிதல், கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், நோய்த் தொற்று தடுப்பூசி போட்டுக் கொள்ளுதல் இவை எல்லாம் கொரானாவில் இருந்து மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள மருத்துவத்துறை காட்டும் வழிமுறைகளாகும். மருத்துவத்துறை காட்டும் இந்தத் தற்காப்பு நடவடிக்கைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுத்தும் விழிப்புணர்வு மக்களுக்குத் தேவை.

கொரானா நோய்த் தொற்றால் பெற்றோர்களை இழந்து தவிக்கும் குழந்தைகளின் கல்வி, வாழ்வாதாரம் ஆகியவற்றை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்திருப்பது இன்றைய காலத்தின் அவசர அவசியத் தேவையாகும்.

எதிர்காலத்தில் கொரானாவின் தாக்குதல்களில் இருந்து மனித குலத்தைக் காக்க உலகளாவிய அளவில் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய மருத்துவ ஆராய்ச்சிகள் மிக அவசியமாக உள்ளன.

கொரானா தொற்று இல்லை என்ற நிலையும், வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் உணவின்றி எவரும் துயருற வில்லை என்ற நிலையும் தான் தனக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல, கொரானா என்ற பெருந்தொற்று இல்லாத உலகைக் காண்போம்!

மக்கள் தம் இயல்பு வாழ்விற்கு திரும்பிட கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் முன்னேற்றம் காணுகின்ற நன்னாளே நமது மகிழ்ச்சிக்குரிய திருநாளாகும்.

புதிய அரசு தம்முன் உள்ள சவால்களை எல்லாம் வென்று, தம் மக்கள் நலப் பணிகளை தொடரட்டும்!

ஓய்வறியா உழைப்புடனும்,
தளராத தன்னம்பிக்கையுடனும்,
மக்கள் நலப்பணிகளுக்காகத்
துடிக்கும் இதயத்தையும்
ஒருங்கே பெற்று
முத்தமிழறிஞர்
கலைஞரின் உருவாகச் செயல்படும்,
மாண்புமிகு. தமிழக முதல்வர்
மு.க.ஸ்டாலின் அவர்களின்
பணிகள் சிறக்க நல்வாழ்த்துக்கள்.

மக்கள் ஒத்துழைப்புடன் கொரானாவை வென்றெடுப்போம்! இன்பமே. எந்நாளும் துன்பமில்லை என்ற நிலை உருவாகட்டும்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

பணிகள் சிறக்கட்டும்

முனைவர். வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் 07.05.2021 அன்று தலைமைச் செயலராகப் பொறுப்பேற்று உள்ளார்!

அன்பு, பண்பு, உண்மை, நேர்மை, உழைப்பு, மனிதநேயம், உதவும் மனப்பான்மை ஆகிய பண்புகள் நிறைந்தவர் முனைவர். வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள். பல துறைகளில் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். பொறுப்பேற்ற எந்த துறையிலும் அந்தத் துறை சார்ந்த எந்தப் பணிகளானாலும், அந்தப் பணிகளை, கடமைகளை நேர்த்தியாகச் செய்து முத்திரைப் பதிப்பவர்.

சுற்றுலாத் துறையில் அருமையான புதுமைகளைச் செய்தவர். "ஹோட்டல் தமிழ்நாடு" தங்கும் விடுதிகளை மேம்படுத்தி விருந்தினர்களின் சலுகைத் திட்டமாக அவர் அறிமுகப்படுத்திய PLATINUM CARD, GOLDEN CARD, திட்டம் இன்றுவரை வெற்றியுடன் நடைபெற்று வருகின்றது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் தனி அதிகாரியாக மிகச்சிறப்பாக பணியாற்றி மாநாட்டின் பெரும் வெற்றிக்கு காரணமானவர்.

இயற்கை பேரிடர் காலங்களில் தனி நபராக இவரின் பங்களிப்பு மகத்தானது.

சுனாமியின் தாக்குதலுக்கு உள்ளான விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள முதலியார்குப்பம் என்ற கிராமத்தைத் தத்தெடுத்து முழுமையாகச் சீரமைத்தவர்.

பேரிடர் காலங்களில் அரவணைக்கும் அன்புக் கரமாக, முனைவர். வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்களின் பணி மகத்தானது. SMART என்பதற்குரிய விளக்கமாக தம் பணிக்களத்தை அமைத்துக் கொண்டவர். 150க்கும் மேற்பட்ட அற்புத நூல்களை எழுதிக் குவித்த எழுத்துச் செம்மல்!

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்."

என்ற குறளுக்கு ஏற்ப கேட்போரை வசப்படுத்தும் ஆயிரக்கணக்கான அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர்.

இளைஞர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டி இளைஞர்களின் Role Model ஆகத் திகழ்பவர். எண்ணற்ற விருதுகள் இவர் விலாசம் தேடி வந்து பெருமை பெற்றுள்ளன.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற திருக்குறளுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் பணிப் பொறுப்புகளை சிறப்பாக செம்மையாக நிறைவேற்ற இதயம் நிறை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

(பொன்னம்பல அடிகளார்)

"நல்லவராக இருந்தால், வல்லமை தானே வந்துவிடும். வல்லமை என்பது பிறரை ஆள்வது மட்டுமல்ல, பிறருக்காக வாழ்வது. அப்போதுதான் நல்லவர் வல்லவராகவும், வல்லவர் நல்லவராகவும் இருக்க முடியும்"

– பொன்னம்பல அடிகளார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவாசக உவமைகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

ஊர் ஆவும் குருட்டாவும்

மாலைநேரம், மேயச் சென்றிருந்த பசுக்கள் வயிறார மேய்ந்துவிட்டு வீடுகளை நோக்கி வந்துகொண்டிருந்தன. தூரத்தில் தன்னுடைய கன்றுகளைப் பார்த்தவுடன் கனைக்கின்றன. இப்பசுக்களுடன் வந்த ஒரு குருட்டுப் பசுவும் கனைத்தது. மற்ற பசுக்கள் கன்றைப் பார்த்து உறவு மேலிட்ட உணர்ச்சியால் கத்தின. குருட்டுப் பசுவோ, கன்றைப் பார்க்காமல் உறவு உணர்வு இல்லாமல் மற்றவை கத்துவதனால் கத்தியது என்ற இந்த எடுத்துக்காட்டை மாணிக்கவாசகர் பொய்யடியார் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டுகிறார். இறைவன்மீது தணியாத காதல் கொண்டு ஒன்றாகி, உடனாகி இருந்து உள்உள்கி நினைந்து அனுபவிப்பவர்கள் மெய்யடியார்கள். அதன் காரணமாக, அவர்கள் இறைவனுடைய திருவருள் இன்பத்தைப் பெறுகிறார்கள். பொய்யடியார்களோ இறைவனை நினைந்து காதலாகிக் கசிந்து அழுவதில்லை; அழ நினைப்பதுமில்லை. ஆனாலும் மெய்யடியார்கள் பெற்றனுபவிக்கும் இன்பத்தைப் பெற விரும்புகின்றார்கள். விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முழுதும் முயற்சிசெய்வதில்லை. அடியார்கள் இறைவனுடைய நாமத்தைச் சொல்லுவதைப் பார்த்து இவர்களும் சொல்லுகிறார்கள். ஆனாலும், மெய்யடியார்கள் நினைந்து நினைந்து நெக்கு நெக்குருகி உளங் கலந்து ஓதுதல் போல், இவர்கள் ஓதவில்லை. உதட்டால் ஓதுகிறார்கள். ஒலிக்குறிப்புத் தோன்றுகிறதே தவிர உள்ளுணர்வு தோன்றவில்லை. இறைவனுடைய திருவருளின்பம் உள்ளத்தால் அனுபவிக்கக்கூடிய ஒன்று. அஃது எப்படி வெறும் போலித்தனமான பொறிகளின் இயக்கத்திற்குக் கிடைக்கும்? பொறிகள், ஒன்றின் குறியினை இன்னொன்று நிரப்பமுடியும். ஆனால் உள்ளம் அப்படியல்ல - இதே கருத்தினை,

"கோவுடனே கூடியதோர் குருட்டாவும் ஊர்புகுதும்" என்று உமாபதி சிவமும் குறிப்பிடுகின்றார்.

மேலும், கண்ணுள்ள பசுக்கள் நன்றாக மேய்ந்து வந்திருப்பதால் அதனிடத்தே பால் வளம் இருக்கும். அவை, கன்றை நோக்கிக் கனிந்தழைத்து ஊட்டமுடியும். குருட்டுப் பசுவோ, வழக்கத்தினால் மேய்ச்சல் தரைக்குப் போயிற்று. எனினும் கண் குருடானமையினால்

நல்லவண்ணம் மேய்ந்திருக்க முடியாது - பால்வளம் இருக்காது. அது எப்படி கன்றுக்கு அன்பு காட்டமுடியும்? அதுபோல மெய்யடியார்கள் ஞானப் பசியுடையராயிருத்தலால் ஞான நூல்களைக் கற்றும் கேட்டும் தனக்குவமை இல்லாத தலைவன்மீது முறுகிய அன்பை வளர்க்கிறார்கள். இறைவனைக் கண்ணப்பர் முழுக்காட்டியதுபோல அன்பினால் முழுக்காட்டிப் பரவசப்படுத்த முடியும். பொய்யடியார்க்கு ஞானப்பசி இல்லை. இறைவன் மீது தணியாத காதலும் இல்லை, ஞான நூல்களைக் கற்கவும் கேட்கவும் வாய்ப்பில்லை. பழக்கத்தினாலேயே பெயர் சொல்லுவார்கள். எனினும் மெய்யுணர்வில்லை. அவர்கள் எங்ஙனம் இறைவனை மகிழ்வித்துத் திருவருளைப் பெற முடியும்?

ஆதலால் நாடகத்தால் அடியார் போல் நடிப்பவர்கள் உண்மையான திருவருள் இன்பத்தைப் பெறமுடியாது. உண்மைத் திருவருள் இன்பத்தைப் பெற வேண்டுமென்றால், இறைவனிடத்தில் உண்மையான அன்புகொள்ள வேண்டும். அதற்கு அன்பினை உளத்தில் தோற்றுவித்து அருள் வழங்கி ஆட்கொள்ளும் வண்ணம் மாணிக்கவாசகர் பிரார்த்திக்கிறார். பாடலைப் பாருங்கள் :

தாராயுடையா யடியேற்கு
உன்தாள் இணையன்பு
பேரா வுலகம் புக்காரடியார்
புறமே போந்தேன் யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்கு
உன்தாள் இணையன்புக்
காராயடியேன் அயலே
மயல்கொண் டழுகேனே! *- திருவாசகம்*

அருள்நெறித்தந்தை குருபூசை வழிபாடு

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 45வது குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் 26ஆம் ஆண்டு குருபூசை வழிபாடு 26.4.2021 அன்று அருளாளயத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழக அரசு நிறுவியுள்ள மணிமண்டபத்தில் அமைந்துள்ள திருவுருவச்சிலைக்கு குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். நிகழ்வில் ஆதீன அன்பர்கள்பலர் பங்கேற்றனர்

இருவேறு மயில் அம் மலைகள்

(தமிழாகரர் தெ. முருகசாமி)

விண்மறைத்து வினைமறைக்கும் உயர்ந்த கோபுரங்களை உடைய திருக்கோயில்களால் பொலிவு பெற்றது தமிழ்நாடு. இக்கோயில்கள் சைவ வைணவப் பிரிவு கொண்டவை. பாடல் பெற்ற தலங்களாகச் சைவக் கோயில்களும் மங்களாசாசனம் செய்யப்பெற்றதாக வைணவக் கோயில்களும் தனித்தனி அடையாளங்களுடன் திகழ்கின்றன. இப்பொதுமையில் சைவஞ் சார்ந்ததாக உணரப்படும் சிவன் கோயில்களின் அங்கமாகத் திகழ்வன முருகனது கோயில்களாகும்.

தமிழ்நாடெங்கும் முருகக் கடவுளுக்குக் கோயில்களிருந்தாலும் ஆறுபடை வீடு என்ற தொகுப்புப் பெயரால் அமைந்த முருகனின் கோயில்கள் சிறப்புக்குரியனவாகும். இந்த ஆறில் திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை என்ற ஐந்தும் குறிப்பிட்ட ஊர்ப் பெயருடைய கோயில்களாகச் சுட்டி உணர்த்தப்பட்டாலும் குன்றுதோறாடல் என்ற ஒன்று, தமிழகத்திலுள்ள மலைகளையெல்லாம் சுட்டும் ஒரு குறியீடாக உள்ளது. சிறப்பாகக் குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்ற மொழிப்படித் தமிழகம் தாண்டிய அயல் மாநிலங்களிலும், நாடுகளிலும் உள்ள மலைகளிலும் மாமுருகன் கோயில் கொண்டிருப்பது விரிந்து பரந்த முருக வழிபாட்டின் சிறப்பைத் தமிழ் அடையாளமாகக் கருதலாம்.

வரையறுக்கப்பட்ட ஆறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, பழமுதிர்சோலையான இடங்கள் மலைகளாக இருப்பதால் இவற்றைக் குன்றுதோறாடலில் சேர்க்காமல் தனியே பெயரிட்டது ஏன் எனில் தேவர்களுக்கு எதிரியான அசுரர்களை வெற்றி கொண்ட முருகனுக்குத் தேவேந்திரன் தன் மகள் தெய்வயானையை மணம்புரிந்து கொடுத்தது திருப்பரங்குன்றம் என்பதால் அத்தலம் தனித்துணரப்பட்டது.

திருவாவினன்குடியோ தன் தாய் தந்தையர்க்கு ஞானப்பழமாகக் காணப்பட்ட தனித்துவத்தால் முருகனுக்கான தனித்தலமாகக் கருதப்பட்டது. அவ்வாறே பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு ஞானம் உதிர்க்கும் சச்சிதானந்த சோலையாகக் காணப்பட்டதால் முருகன் வாழும்

பழமுதிர் சோலை தனித்து உணரப்பட்டது. ஆனாலும் தமிழ் நிலப்பரப்பில் மலை நிலமான குறிஞ்சியே முதன்மையானதாகக் கருதப்பட்டதால் பிற எல்லா மலைகளையும் உள்ளடக்கிய வகையில் குன்றுதோறாடல் எனப்பட்டதென்க!

மலையும் மலைசார்ந்ததான குறிஞ்சி நிலத்திற்கும் முருகனே கடவுள். சேயோன் மேய மைவரை உலகம் என்பது தொல்காப்பியம். இக்குன்றுதோறாடலில் திருத்தணி, வள்ளிமலை, இரத்தினகிரி எனக் கூறப்படும் மலைக்கோயில் வரிசையில் மயிலமும் குன்றக்குடியும் அடங்கும்.

மயிலம் என்ற முழுப்பெயரோடு விளங்கும் முருகனது தலமானது - தற்போதைய விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்திற்குத் தென்கிழக்கே 15 கி.மீ. தூரத்தில் புதுச்சேரி செல்லும் நெடுஞ்சாலையில் உள்ளது. மயிலுக்குரிய தோற்றமாகத் தோகை போன்ற அடர்ந்த சோலையும் உச்சிக் கொண்டைபோல் கோயிலின் கோபுரமும் உள்ளதால் மயிலம் எனப்பட்டதாகத் தெரிகிறது.

புறத்தோற்றத்தால் இங்ஙனம் அமையினும் இத்திருக்கோயிலுக்குள்ள தலபுராணச் சிறப்பால் மயிலம் எனப் பெயர் அமைந்ததற்கான காரணம், ஆன்மீகத் தளத்தில் புராணப் பாங்கான பெருமைக்குரியதாக உள்ளது. அதாவது, இக்கோயிலைப் பராமரிக்கும் வீரசைவத் திருமடத்தின் வரலாற்றோடு மயிலத்திற்கான பெயர் வந்த குறிப்பு, சிந்தனைக்குரியதாக உள்ளது.

கயிலாயத்தில் சிவகணத் தலைவராக இருந்த சங்குகன்னர் சிவபெருமான் ஆணைப்படி கிழக்குக் கடலில் இளஞ்சூரியத் தோற்றத்தில் பாலசித்தராக அவதரித்து, கரையேறி அருகிலுள்ள பாளையம் என்ற சிற்றூரில் தங்கி, ஆசிரமம் அமைத்துப் பல சித்துக்களைப் புரிந்து வந்தார். பொம்மு என்றால் இளமை, பால்யம் என்ற பொருளடிப்படையில் சங்குகன்னர் பால்யராக வந்து கரையேறிய பாளையம் பின்னாளில் பொம்மையார்பாளையம் எனப்பட்டது.

இந்நிலையில் கயிலாயக் கந்தபுரியில் வீற்றிருந்த முருகன், தேவர்களின் குறையைத் தீர்க்கவேண்டிய சிவசக்தி வேல்தாங்கி தந்தையின் அருள் கூர்ந்த கட்டளையால் அசுரர் குலத்தை அழித்தார். அவ்வசுரர் கூட்டத் தலைவனான சூரபதுமனை வேலால் கொல்கையில் சூரன் சேவலும் மயிலுமாய் வந்து முருகனை எதிர்த்தான். அவனது

கொட்டைத்தை அடக்க வேண்டி முருகன் அந்த அசுர மயில்மீது திருவடியூன்றி நின்றார். முருகனது திருவடிபட்ட பேற்றால் முருகனைத் துதிக்கலானான். வரமும் வேண்டினான். முருகன் திருவடி தன்மீது பட்டதால் அவனை வாகனமாகத் தாங்கித் திரியவிரும்பினான். நீ அரசுப் பிறப்பில் பல தீங்குகள் இழைத்ததால் அவை முற்றும் கழியுமாறு மலையடிவாய்த் தவம் செய்கையில் சங்குகன்னர் என்பார் உன்னுடன் தவம்புரிவார். அவருக்கு அருள்புரிய வருங்காலத்தில் உன் எண்ணம் நிறைவேறும் என்றார் முருகப்பெருமான்.

முருகன் கூற்றுப்படி சங்குகன்னர், பாலசித்தராய் பொம்மையார்பாளையத்திலிருந்து மயிலம் வந்து தவம்புரிந்தார். அவருக்குத் தவத்தின் பயனை நல்குமாறு வள்ளியும் தெய்வானையும் முருகனிடம் கூற, பருவத்தாலன்றிப் பழா என்பதற்கேற்பத் தக்க பருவம் வந்தெய்தாத நிலையில் தமக்கு நினைவூட்டிய குற்றத்திற்காக வள்ளி தெய்வானையரைச் சித்தகன்னியராகப் பூலோகத்தில் பிறக்கச் சபித்தார். அவ்வாறே அவர்கள் நடுநாட்டில் தென்பெண்ணையாற்றிற்கு வடக்கே உள்ள விந்திய பர்வதத்திற்குத் தெற்கே மயிலத்தில் தவம்புரிந்த பாலசித்தர் ஆசிரமத்தில் சித்தகன்னியராய், சித்தரின் வளர்ப்பு மகளிராய் வாழ்ந்து வந்தனர்.

சித்தர்க்கும் சித்த கன்னியர்க்கும் அருள்பாலிக்கும் காலம் வந்துற்றதால் முருகன், வேடர் உருத்தாங்கி பாலசித்தர் ஆசிரமம் வந்து அங்கு பாதுகாக்கப்பட்ட எல்லையான சித்தகன்னியர் வாழும் அந்தப்புரத்திற்குச் செல்ல எத்தனித்த வேளையில் பாலசித்தர் தடுத்து நிறுத்தும்போது இருவர்க்கும் போர் மூண்டது. முருகனது திருமேனி பாலசித்தர்மீது பட்டதும் ஞானம் வரப்பெற்ற சித்தர், வந்து போர் செய்பவன் முருகனே எனத் தேர்ந்து தெளிந்து வணங்கி வழிபட்டார். மேலும் தாம் வளர்த்த மகளிர் இருவரையும் மணந்து கொள்ளச் செய்ததால் மயிலமுருகன் மணக்கோல மாமுருகனாய்க் காட்சி தந்தான். மலையை விட்டு நீங்காத நிலையில் மலையாய் நின்று தவம் செய்த அசுரமயிலை வாகனமாகக் கொண்டான். மயிலே மலையாய் நின்றதால் மயிலமலை எனப்பட்டது. இதுபற்றி மயிலத் தலபுராணமாகிய மயூராசல புராணம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது. (மலையுற்பவம் உரைத்தது)

கரிமா மகளை மருவும் அருட்கடலே நின்றன் கழலிணையைப்
பரிமா மயிலில் தங்கி நிற்கும் பலனைப் பெற்றேன் சலனமற்றேன்
நிருபா எனைஆட் கொண்டதுவே நியமமாகில் என் னம்சத்து
ஒருபால் இங்ஙன் மலைஉருவாய் உறைய வேண்டும் கற்பகமே!

கற்பா கற்ப முடிவின்றிக் கழறும் மயிலை மலையென்ற
நற்பேர் விளங்கக் கீர்த்திபெற்று நாதா நின்தன் மாதருடன்
பொற்பாய் அமர்ந்தே அடியார் குழாம் போற்ற நாளும் வரம்நல்கி
நிற்பாய் உமைபாலா என்றான் நீல மயிலாய் நிலை நின்றான். (226)

நடு நாட்டு மயிலம் போலத் தென்பாண்டி நாட்டில் உள்ள குன்றக்குடியும் மயில் வடிவத் தோற்றமுடைய மலையாகும். இம்மலைக்கு மயிலமலை, சிகண்டிமலை, சிகிமலை, தோகைமலை என்றெல்லாம் மயிலின் பெயர்த் தொடர்பான பெயர்கள் உள்ளன. மேலும் மயூரகிரி என்ற பெயரில் தலபுராணமும் உள்ளது. இப்புராணப் பெயர், மயிலத்திற்கான மயூராசலபுராணம் போன்றதாகும். இக்குன்றக்குடி, மயில் வடிவாக இருப்பதற்கான காரணத்தைத் தலபுராணம் கூறுகிறது.

குன்றக்குடி மலையானது மயில் வடிவில் வடக்கு நோக்கிய முகமும் தெற்கே விரிந்த தோகையாகவும் கொண்டுநிற்கும் இயற்கைப் புறக் காட்சியால் மயூரகிரி எனப்பட்டாலும் தலபுராணம் கூறும் கதைப்பாங்கு உண்மையில் மயில்வடிவைப் பெற்றதன் சிறப்பை உறுதிப்படுத்துகிறது.

முருகப் பெருமானது ஊர்தியாகிய மயிலே வடிவமாக அமைந்ததும், அந்த மயில் முருகனை வழிபட்டுச் சாரூபம் பெற்றதும் குன்றக்குடியில் என்பதால் மயூரகிரி என்ற பெயர் பொருந்துவதாயிற்று.

நான்முகனும், திருமாலும் கயிலையின் கந்தபுரியில் குடிகொண்டிருந்த முருகனை வழிபட வந்தனர். அங்கே கணங்களாக இருந்த சூராதியோர் தம் தவத்திற்கு அடிக்கடி ஊறுசெய்த தேவர்களைப் பழிவாங்க எண்ணித் தேவகணங்களான பிரமனையும் திருமாலையும் குறைவுபடுத்தத் திட்டமிட்டனர். அதனால் முருகனது மயிலினிடம் சென்று, நான்முகனின் அன்னமும் திருமாலின் கருடனும் வேகமாய்ப் பறந்து செல்வதில் தங்களைக் காட்டிலும் மயிலுக்குத் திறனில்லை எனக் குறைவுபடப் பேசியதாகப் பொய் கூறினர்.

சினங்கொண்ட மயில் அன்னத்தையும் கருடனையும் விழுங்கிவிட, முருகனை வழிபட்டுத் திரும்பிய நான்முகனும், திருமாலும் தங்கள் ஊர்திகளைக் காணாமல் திகைத்தனர். இதனை முருகனிடம் சென்று முறையிட்ட அளவில் நடந்த உண்மையை யூகித்த முருகன் மயிலைக் கண்டித்து அன்னத்தையும் கருடனையும் கக்கும்படிப் பணித்தார்.

இங்ஙனம் இருவர்க்கும் இடையூறு செய்ததால் மயிலை மலையாகும்படிச் சபித்தார். எப்போதும் ஆடும்மயில் ஆடாது அசையாதிருக்கும் மயிலாய்ச் சபித்ததும் மயில் சாபவிமோசனம் வேண்டியது. முருகன், பாண்டிநாட்டில் திருப்புத்தூருக்குக் கிழக்கே உள்ள குன்றுகளுக்கு இடையே போய் மலையாயிருக்கும் போது அருள்புரிவதாகக் கூறினார். இதனால் அம்மயிலானது முருகனின் வடக்கே உள்ள கந்தபுரியை நோக்கி வடக்கே முகம் வைத்துத் தெற்கே தோகையைக் கிடத்தி மலைவடிவாய்த் தவம் செய்தது.

இந்நிலையில் கோள் சொன்ன சூரனாதியரை அசுரர்களாகப் பிறக்கும்படிச் செய்து, அவர்கள் தேவர்களுக்கு தொல்லை கொடுத்ததால் அவர்களை அழிக்க அறுமுகத்தோடு தோற்றமளித்து அசுரர்களை அழித்தார். பின்னர் முருகன், மலைவடிவாய்த் தவம் செய்த மயிலின் சாபத்தை நீக்கி மயிலை இருபாகமாக்கி ஒருபாகத்திற்குச் சாருப பதவி அளித்ததோடு மற்றொரு பாகத்தைத் தம் இருப்பிடமான மலையாகவே கொண்டார். இந்தவாறாக மயிலமும் குன்றக்குடியும் மயில் அம் மலைகளாக ஆயின. சூரபதுமன் மயிலும், சேவலுமாக மாறிய நிலையில் மயிலத்தில், அசுரமயிலாயிருந்து தவம் செய்தது மலைவடிவில் என்பதும், முருகனின் வாகனமாகிய மயில் குன்றக்குடியில் சாப விமோசனம் பெற்றது மலைவடிவில் என்பதும் ஒருசேர உணருமாறுள்ளதால் மயில் அம்மலைகள் மயிலமும் குன்றக்குடியுமேயாம் என்க. இவ்வுண்மையை ஒருசேரக் கருதுமாறாக இரண்டிற்குமான தலபுராணங்கள் முறையே மயூராசலபுராணம், மயூரகிரி புராணம் எனப் பெயர் அமைந்ததே பொருத்தம் எனலாம். என்றாலும் குன்றக்குடி, மயிலம் என்ற தனித்தனிப் பெயர்களிலேயே அவைகள் குன்றுதோறாடல் படைவீட்டில் புகழ்பெற்று விளங்குகின்றன.

இவ்விரு திருத்தலங்களும் திசையால் தெற்கு வடக்கு என்றிருப்பதோடு மலைகளின் திட்பச் செறிவால் வேறுபட்டனவாக உள்ளன. "குன்று தோறாடலின் முந்திய குன்றக்குடி" என வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் குன்றக்குடியின் பழமையைப் போற்றுகிறார். இதனால் மயிலத்திற்கு முந்தியது குன்றக்குடி எனத் தெரிகிறது.

குன்றக்குடி கருங்கற்குன்று. மயிலம் மணற்குன்று. மலை உச்சியில் உள்ள கோயில் மூலவர் காட்சியிலும் வேறுபாடுண்டு. ஆறுமுகத்துடன் வடக்கு நோக்கிய முகமுடைய மயிலில் அமர்ந்தபடி காட்சி தரும் குன்றக்குடி முருகனின் இருபக்கமும் உள்ள வள்ளியும்

தெய்வானையும் மயில்கள்மீது அமர்ந்தவாறு காட்சி தருவது மயிலத்தில் இல்லாத காட்சியாகும், வடக்கு முகம் பார்த்த மயிலில் வள்ளியும் தெற்கு முகம் பார்த்த மயிலில் தெய்வானையும் உள்ளதாகச் சிற்பி, தெய்வச் சிலைகளை வடித்துள்ளது சிந்தனைக்குரியதாக உள்ளது.

முருகனுக்கு மூன்று மயில்கள் உண்டு. ஓங்காரப் பிரணவத்தையே மயிலாகக் கொண்டது பொதுமையாகும். வடக்கு நோக்கிய முகமுடைய மயில் அசுர மயில், தெற்கு நோக்கிய முகமுடைய மயில் இந்திர மயில், இந்த மூன்றையும் தனித் தனியே உணர ஆன்றோர்கள் திருக்கோயிலின் வாகன அமைப்புகளை வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

வள்ளி தெய்வானையுடன் முருகன் தோகை விரித்த மயிலின் மீது அமர்ந்த கோலமே பிரணவ மயில் தோற்றம். இதில் மயிலின் முகமானது தெற்கு வடக்காக அல்லாமல் நேரே உள்ளதாக இருக்கும்.

சூரபதுமனோடு சமர்புரிந்தபோது சூரன் சக்ரவாளப் பறவையில் அமர்ந்து போர் புரிந்ததால் தேவேந்திரன் மயிலாக மாறி முருகனைத் தாங்கிப் போரில் உதவினான். இது தென்திசை பார்த்த முகம் கொண்டதாய் அமைந்த மயில் போர் நிமித்தமாக வந்த மயிலாதலின் தென்முகமயிலில் முருகன் ஆரோகணித்து வருவது அரிதாகும்.

ஆனால் வடக்கிருந்து தவம் செய்த குறிப்பிற்கேற்ப, அசுரமயில் மீதிருப்பதே முருகனுக்கு இயல்பாகும் என்று குன்றக்குடித் தலபுராணத்தின்படி முருகனது மயில், சாபம் பெற்ற நிலையில் வடக்கிருந்து மலைவடிவில் தவம் செய்தது. அவ்வாறே மயிலத் தலபுராணத்தின்படி வேல்பட்டழிந்த சூரன் சேவலும் மயிலுமாய் மாறியதும் மயில் வேண்டிக்கொண்டதற்கேற்ப மலைவடிவில் வடக்கிலிருந்து தவம் செய்தது. இந்த இரண்டு தலபுராணக்குறிப்பின்படி வடக்குமுக மயில் மீதமர்ந்து முருகன் அருள்பாலிப்பதே சிறப்பாகும்.

நிரந்தரமான ஓங்காரமயில், கண்ணால் காணமுடியாதது. செவிப்புலத்தால் உணர்ந்து ஓதுதற்குரியது. இந்திரமயிலோ ஒரு தேவையின் பொருட்டு வந்ததால் தேவை முடிந்ததும் அம்மயிலின் தோற்றமும் அருகிற்று. ஆனால் வடக்கிருந்த மயிலையே முருகன் கொண்டதால் உலக மக்கள் முருகனை வணங்குங்கால் வடக்குமுக மயிலையுமே சேர்த்து வணங்குவர். இந்த வடக்குமுக மயில், பிரணவ, இந்திர மயில்களுக்கு இல்லாத ஓர் உலகியல் உண்மையைக் கற்பிப்பதாக

உள்ளதால் இவ்வடக்குமுக மயில்மீது ஆரோகணிக்கும் முருகனை வணங்குதலே சாலும் என்க.

குன்றக்குடித் தலபுராணத்தின்படி மயில் செய்த தீமையால் முருகனது சாபத்திற்கு ஆளாகிப் பின்னர் சாபவிமோசனம் பெற்றது. மயிலத் தலபுராணத்தின்படி அசுரமயில், முன்னர் அசுரனாக இருந்து செய்த தீமையால் அது கழியத் தவமியற்றிப் பின்னர் பேறு பெற்றது. இவ்விருமயில்களும் செய்த தீமை கழிந்ததும் முருகனைத் தாங்கியதாகக் குறிக்கப்படும் குறிப்பே உலக மக்கட்கு எடுத்துக்காட்டானதாகும். இதனையே கந்தபுராணம்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி அடைவர்

எனக் குறிக்கின்றது. இப்பாடல் அசுர மயிலுக்குக் கூறப்பட்டதானாலும் வடக்கிருந்து தவமியற்றிப் பேறு பெற்ற குன்றக்குடிப் புராணமயிலுக்கும் பொருந்தும் என்பதால் வடக்கு முகம் பார்த்த மயில் வாகனமே முருகனுக்குரித்தாம் என்க.

இந்த மயில்களின் தோற்ற அமைப்பிற்கேற்பவே குன்றக்குடியில் இச்சா சக்தியான வள்ளியும் ஞானசக்தியாகிய வேல் தாங்கிய முருகனுக்கும் ஆன்மாக்களுக்கு இச்சையுடன் அருள்பாலிக்க வடக்குமுக மயிலை அடையாளம்காட்டிய அளவில் வடக்கு முக மயில்கள் மீது உள்ளவர்களாகவும், தேவேந்திரன் மயிலாக வந்ததன் தொடர்ச்சியில் அவனது மகள் தெய்வானை, தென்முக இந்திரமயில் மீதுள்ளதாகவும் பிரித்துணரச் சிற்பி தெய்வச் சிலைகளை வடித்துக் காட்டியது மிக மிகப் பொருத்தமுடையதன்றோ!

குன்றக்குடியின் மயில்கள் இங்ஙனம் இருக்க மயிலத்திலோ முருகன், நின்ற கோலத்தில் வடக்குமுக மயிலைத் தழுவியவாறு இருமாதரும் நின்ற கோலத்தில் புடைசூழக் காட்சி நல்குகிறான்.

குன்றக்குடி, மயிலமாகிய இரண்டு கோயில்களின் மூலவர் சன்னிதிகள் கிழக்கு நோக்கியிருந்தாலும் கோயில் முகப்புக் கோபுரங்களில் ஓர் ஒற்றுமையும் வேற்றுமையும் உள்ளன. கிழக்கு நோக்கியது மயிலமலைக் கோபுரம், தெற்கு நோக்கியது குன்றக்குடிக் கோபுரம். இந்த வேறுபாட்டில் ஓர் ஒற்றுமையும் உண்டு. இரண்டு கோபுரங்களின் வாயில்கள் எந்நாளும் திறந்திருப்பதில்லை. விழாக்கள் நடைபெறும் விசேடத்தின் போதே திறக்கப்படும்.

இரண்டு மலைக்குமான சிறப்பில், மயிலமலைக் கோயில் வரை மகிழுந்து, பேருந்து, ஈர் உருளை வாகனங்கள் செல்லுதல் போல் குன்றக்குடியில் வாய்ப்பில்லை. மலையடிவாரத்தில் மட்டுமே வாகன நிறுத்தம் உண்டு.

முருகனது தல விசேடத்திற்கேற்றவாறு இரண்டு கேயில்களும் மாதக் கிருத்திகையின்போது பக்தர் கூட்டம் அலைமோதும். தைப்பூசம், பங்குனி உத்திரப் பெருவிழாக்கள் இரண்டும் சிறப்பானதாகும். இச்சிறப்பில் சிறு வேறுபாடுண்டு. தைப்பூசத்தில் குன்றக்குடியில் தேரோட்டம் உள்ளதுபோல் மயிலத்தில் இல்லை. பங்குனியில் உண்டு. ஆனால் குன்றக்குடியில் தைப்பூசத்திற்கென்றும் பங்குனிப் பெருவிழாவிற்கென்றும் தனித் தனியாக இரண்டு தேர்கள் உள்ளனபோல் மயிலத்தில் இரண்டு தேர்கள் இல்லை.

குன்றக்குடியைப் பொறுத்தமட்டில் வரலாற்றுப் பதிவுகள் மிகுதியும் உள்ளனபோல் மயிலத்திற்கு இல்லை. சமண சமயத் தொடர்பான மலைக்குகைகள், கல்வெட்டு எழுத்துக்கள் குன்றக்குடியில் உள்ளன. பாண்டிய நாட்டில் சமணம் பரவியிருந்த காலந்தொட்டு முருகனது கோயில் குன்றக்குடியில் இருந்ததாக உணரலாம். அதனால்தான் தண்டபாணி சுவாமிகள் "குன்றுதோறாடலில் முந்திய குன்றக்குடி" என்றார் போலும்! நடுநாடானா மயிலத்தைச் சுற்றிலும் உள்ள ஊர்களில் தொடர்புகள் இருந்தனவாயினும் அதன் தாக்கம் முருகனது மயில மலையில் காணப்படவில்லை.

குன்றக்குடிக் கோயிலைச் சுற்றிக் கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டு எழுத்துக்களில் பழந்தமிழ் வட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன. சோழ, பாண்டியர்களின் கல்வெட்டுக்களும் உள்ளன. இவை கோயில் தோற்றத்தின் பழமையை உணர்த்துவனவாகும்.

இப்படியாகப் பழம்பெருமையோடு புதுப்புகழ் புதுக்கவல்ல அரசியல் தொடர்பான நிலையில் ஆங்கிலேயர்களை எதிர்த்த மருது சகோதரர்களின் திருப்பணிகளால் சிறப்பு கொண்டது குன்றக்குடி என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இரு தலங்களுக்கும் அந்தந்த வட்டாரக் கவிஞர்களாலும் அருளாளர்களாலும் பாடப்பெற்ற இலக்கிய ஒற்றுமைகள் உள்ளன. அருணகிரிநாதரின் திருப்புகழ், தண்டபாணி சுவாமிகளின் பாடல்கள், பாம்பன் சுவாமிகளின் பதிகங்கள் மற்றும் தமிழ்த் தென்றல்

திரு.வி.க.பாடிய பாடல்கள் இரண்டு தலங்களுக்கும் உள்ளன. மேலும் வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை பாடிய குன்றக்குடி மயூரகிரி புராணம் போல மயிலத்தின் மயூராசல புராணம் விருத்தாசலம் தியாகராசக் கவிராயரால் பாடப்பட்டுள்ளது.

வரகவி வள்ளல் பாடுவார் முத்தப்பச் செட்டியார், மதுரகவி ஆண்டவர், பொன்னம்பல சிவம் போன்றோர் தனித்தனியே பாடிய குன்றக்குடிக்கான இலக்கியம் போலக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள், மயிலத்தைத் தனியே பாடாவிட்டாலும் மயிலத் திருக்கோயிலை அருளாட்சி செய்யும் பொம்மபுர ஆதீன கர்த்தராம் சிவஞான பாலசுவாமிகள் பற்றிப் பாடிய இலக்கியங்களில் மயிலம் பற்றிய கருத்துக்களைப் பரவலாகப் பாடியுள்ளார். மேலும் பாவேந்தர் பாரதிதாசனின் மயிலம் சுப்பிரமணிய துதியமுதும் மயிலம் பஞ்சரத்தின் கீர்த்தனையும் மயிலத்திற்கான புத்திலக்கியங்களாக உள்ளன.

இரண்டு கோயில்களும் அக்கோயிலைச் சார்ந்த ஆதீனப் பராமரிப்பில் பேணப்பட்டு வருகின்றன. குன்றக்குடியானது திருவண்ணாமலையை ஆதீன மூலமாகக் கொண்டுள்ளது போல மயிலமும் புதுச்சேரியைச் சார்ந்த கிழக்குக் கடற்கரையில் உள்ள பொம்மையார்பாளையத்தை ஆதீன மூலமாகக் கொண்டுள்ளது. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க இரண்டு ஆதீனத் திருமடங்களும் பாடுபட்டாலும் குன்றக்குடி, சைவத் திருமடாலயமாகவும் மயிலம் வீரசைவ மடாலயமாகவும் உள்ளன. இத்திருக்கோயில் வளாக அமைப்பில் மயிலத்தில் வீரசைவத்தைப் பரப்ப வந்த ஆதிபாலசித்தரின் ஜீவசமாதி கோயில் உள்ளது போல் குன்றக்குடியில் எவருடைய சமாதியும் கோயில் வளாகத்தில் இல்லை.

ஆக, குன்றக்குடியும் மயிலமும் மூர்த்தி, தீர்த்தம், தலம் என்ற புராணப் பாங்காலும் இலக்கியச் செழுமையாலும் ஆதீனப் பராமரிப்பாலும் குன்றுதோறாடல் கோயில்களாகப் புகழ்பெறும் நிலையில் இரண்டு மயிலால் சிறப்புப்பெற்று ஓங்கியுள்ளதால் இரண்டும் இருவேறு மயில் அம் மலைகளாம் என்க!

துணைநின்ற நூல்கள் :

குன்றக்குடி, மயிலத் தலபுராணங்கள், இலக்கியங்கள் மற்றும் குன்றக்குடிக் கும்பாபிடேக மலர் (3.5.2014)

வண்டமிழும் வடமொழியும்

(குருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

"பாதிரி" என்பது வடமொழியில், "பாடலம்" எனவழங்கும்; அதனால் பாதிரிப்புலியூரை வடமொழிவாணர் "பாடலிபுரம்" எனமொழி பெயர்த்துக் கொண்டனர். மக்கட்பெயர் ஊர்ப்பெயர் முதலியவற்றை வடமொழியில் மொழிபெயர்த்துத் தனக்கே உரியது போல வழங்கும், கீழ்மக்கள் செயல் வடமொழிஒன்றுக்குத் தான்உண்டு. இதன் இனமாகக் கருதப்படும் ஐரோப்பிய மொழிகள்பால்இல்லாத இத்தீச் செயல், வடமொழிக்கு எங்ஙனம் உண்டாயிற்று என்பது பெரும்புதிராகவே உள்ளது?

என்று உரைவேந்தர் ஔவை துரைசாமி ஐயா அவர்கள் தமிழ்த்தொகை (26) நூலில் ஆய்ந்து கூறுவது எண்ணத்தக்கது. சைவசமயகுரவர்கள் வடமொழியும் வண்டமிழும் இருகண்கள் எனப்போற்றினர். அங்கயற்கண்ணி என்ற திருமுறைப்பெயரை மீனாட்சி ஆக்கியதால் தமிழ்ப் பெயர் வழக்கொழிந்தது. 'தேனைக்காவில்' இன்மொழி என்று திருவானைக்கா அம்பாள் பெயரை தேவாரம் அடையாளம் காட்டியதை, அகிலாண்டேஸ்வரி என்று ஆக்கி, 'தேன்மொழி' மறைந்தது.

'ஆனைக்கா அண்ணல்' என்று வழங்கிய தேவாரப்பெயர் ஜம்புகேஸ்வரர் ஆகியது. 'சொக்கர்' என்ற தமிழ்ப்பெயர் சுந்தரர் ஆகி, இன்று சுந்தரேசுவரர் என்று வடமொழியாகி சொக்கேசர் ஏட்டளவில் உறங்கலாயிற்று.

தொல்காப்பியர் வடமொழிக்குரிய தமிழிடத்தை வரையறுத்த தமிழ்க்காப்பு இன்று மந்திரமொழியாகியது. வமொழியின் தெய்வம் சார்ந்த நலத்தால், சமய குரவர்கள் போற்றிய தூய தமிழ்ப்பெயர்களை, பெரும்பாலும் வழிபடவைக்கும் அன்பர்களின் போதனையால், மக்களிடம் வடமொழிப்பெயர்கள் செல்வாக்குப்பெற்று, இன்று தமிழ்மக்கள் பெரும்பாலோர் பெயர்கள் வடமொழிப் பெயர்களே நிறைந்து நிலவுகின்றன.

வடமொழி 51 எழுத்துக்களும் பெரிய சிவன்கோயில்களில் 51 சிவலிங்கமாகப் போற்றி வணங்கப்படுவதும் சிந்திக்கத்தக்கது. அதேபோல பன்னிரு திருமுறைத் தமிழும் திருமுறைக்கோயிலில் இருத்தி வணங்கத்தக்கது என்பதை யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர்அவர்கள் செய்து காட்டியதை, தருமையாதீனம் மூத்தகுருமூர்த்திகள் தீருவாரூர்கொண்ட குருபிரான் பன்னிருதிருமுறைக்கும் திருக்கோயில் மரபீரோ செய்துகொடுத்து அடியவர்கட்கு, திருமுறைத்தமிழும் மகாதேவபாடை எனப் போற்றும்படி வழிகாட்டிய அரிய செயல் எண்ணி வணங்கத்தக்கது.

தருமையாதீன ஆராய்ச்சி நிலையஇயக்குநர் சேக்கிழார் அடிப்பொடி திரு.டி.என்.இராமச்சந்திரனவர்கள் 'வடமொழிதேவபாஷை' 'தமிழ்மகாதேவபாஷை' என ஆய்ந்து கூறும் உண்மை, கோயில் சார்ந்த பூசகர் பலரும் உணர்ந்து, தாமும் தமிழ்கற்றுப் போற்றவேண்டும்.

திருமுறைக் கலைஞர், அமரர்.க.வெள்ளைவாரனார் அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நடந்த தமிழ் அர்ச்சனை இயக்கவிழா, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் நடந்தபோது அவர் வடமொழியால் நன்மையா? தீமையா? என்ற இரண்டு வினாக்களுக்கு ஒரே வரியில் விடை தரவேண்டும் என்றார். விழாவில் கலந்து கொண்ட பெரும்புலவர்களில், மகாவித்துவான் தண்டபாணிதேசிகரையும், பெரியவர் திரு. வெள்ளைவாரணனாரையும் பார்த்துக்கேட்டபோது, தேசிகர் ஐயா 'நன்மையும் உண்டு; தீமையும் உண்டு' என்றார்கள்.

பெரியவர் வெள்ளைவாரணர் ஐயா, 'வடமொழியால் தீமையே' என்று தேற்றேகாரம் இட்டு உரக்கக்கூவி, முடிவு கூறினார்கள். அடிகளார் அவர்கள் அதனால் தான் சுந்தரர்க்கு இறைவன் 'நம்மேல் சொற்றமிழ் பாடுக' 'பாட்டே அர்ச்சனை' என்று வலியுறுத்திய சம்பவம் பலருடைய கவனத்திற்கு வாராத செயலாகும் என்றார்.

மற்றொரு சம்பவம் : திருப்புகலூர்த் தேவாரத்தில்,

'தென்சொல்விஞ்சமர் வடசொல் திசைமொழி
எழில் நரம்பெடுத்து
துஞ்சுநெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு
தொல்புகலூர்'

என்ற பாடல் வரிகளில், தென்சொல் - தமிழையும் வடசொல் - ஆரிய மொழியையும் குறிக்கும் என, உரை வரைந்த தருமையாதீன

உரைக்குறிப்பாளர் ஐயா முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களிடம் அடியேன் நேரில் தரிசிக்கும்போது, அவரிடம் புலவர் பாடம் கேட்ட பழக்கத்தால், 'விஞ்சமர்' என்ற அடைமொழி, வடசொற் மட்டும் குறிக்கும் என்பது போல் வரைந்தது, தமிழிற்கு இல்லையா? என்று வினவினேன். அதனை இடைநிலைத் தீவகம் என்றார். உடனே 'விஞ்சமர்' என்ற அடைமொழியைத் தமிழிற்கும் கூட்டுக- என்பதன் குறிப்புரை வெளிப்பாடு – என்றருளிய சம்பவம் சிந்தனைக்கு உரியது.

மற்றொரு சிந்தனை :

சுந்தரர் தமது தேவாரத்தில் இறைவன் தமிழால் நன்கு பாவிக்கவல்லான் என்றும், அவ்விறைவன் எட்டு வகையாகப் புணர்ந்திருக்கின்றான் என்ற தேவாரத்தில்

'சூழ்ஒளிநீர் நிலம்தீ தாழ்வளி ஆகாசம்
வானுயர் வெல்கதிரோன் வண்டமிழ் வல்லவர்கள்'

என்ற வரியில், தமிழ் கற்ற - வண்டமிழ் வல்லவரிடமும் இறைவன் குடிகொண்டுள்ளான் என்று அருளுவார். இதனால் வடமொழியின் ஆதிக்கம், தமிழ்மொழியைப் பாதித்து இன்று தமிழை ஓதுவாரிடம் ஒப்படைத்துவிட்டு, பூசனை செய்பவர் ஞானசூன்யமாய் தமிழைப் புறக்கணித்து தனக்கு உரிமையில்லாததுபோல் ஒதுங்குவது சரியன்று!

திருமுறைப் பாடல்பெற்ற தமிழ்ச் சொற்களுக்காகவே தமிழ்நாட்டுக் கோயில்கள் கற்கோயிலாகின. வடமொழிக்காக பெருங்கோயில்கள், சோழரும் பாண்டியரும், பிறரும் எழுப்பவில்லை. சொல்லுக்கே கற்கோயில்களை எழுப்பினர். இன்று வேதம், ஆகமம் புராணம், இதிகாசம், திருமுறை என்ற வரிசையில் திருமுறை நான்கையும் உள்ளடக்கி பாடல்கள்மூலம் தமிழ்மக்களை உய்விக்கின்றன. புராணமும் திருமுறையும் இன்று கோயில்களில் புறந்தள்ளி பூசகர்களின் சொந்தமில்லாதது போல் ஆகிவிட்டன.

சிவபெருமான் தனக்குப் பூசைசெய்து அலங்கரிக்கின்ற மாலை, அணிகலனைவிட, தனக்கு அணிகலனாக தமிழ்ப்பாடல்களையே விரும்புவார் என்று அப்பர் சுவாமிகள் அருளிய பாடல் ஒன்று அறியத்தக்கது. இப்பாடல் மற்றவர்கள் அறிவதைவிட, பூசகர்கள் படித்துப் பைந்தமிழைப் போற்ற வேண்டும். அப்பாடல்,

பூம்படிமக்கலம் பொற்படிமக்கலம்
என்றிவற்றால்
ஆம்படிமக் கலமாகிலும் ஆரூர்
இனிதமர்ந்தார்
தாம்படிமக்கலம் வேண்டுவரேல்
தமிழ்மாலைகளால்
நாம்படிமக்கலம் செய்துதொழும்
மடநெஞ்சமே

வடமொழி தேவபாடை, தமிழ்மகாதேவபாடை என்பதை இன்று அந்தணர் ஒருவர் சிந்தித்ததை பூசகர்கள் உணர்ந்து தமிழையும் கற்று மக்கட்கு ஆசிதரவேண்டும். ஆதி சைவர்களில் முன்னிருந்தவர்களில், சிவத்திருவாளர்கள், ஈசர்னசிவாசாரியர், திருவாடானை ஐயாமணிசிவம் முதலியோர்போல இன்று தமிழையும் திருமுறையையும் சமமாகப் போற்றுபவர்களில் - திருமுறைப் புலவராய் இருப்பவர் ஒரே ஒருவர் சிவத்திரு திருப்பரங்குன்றம் ராஜாப்பட்டர் ஒருவரே. வருடம் ஒருமுறை 12 திருமுறைகளையும் முற்றோதல் பணியில் எல்லா ஓதுவார்களைக் கொண்டு, மதுரைக் கோாயிலில் பக்கவாத்தியத்தோடு ஓதச் செய்து 12 நாட்கள் தன் சொந்தப் பொருளில் சன்மானத்தோடு, வெள்ளிக்குவளை திருமுறைவாணர்க்கு வழங்குவது போற்றத்தக்க அரிய செயலாகும்.

அதோடு பாடல்பெற்ற எளிய கோயில்கள் சென்று உருத்திரா அபிஷேகம் செய்வதோடு, திருமுறைவாணரையும் அழைத்துச் சென்று, பாடல்பெற்ற தலப்பதிகங்களை ஓதச்செய்து, தம்மாணாக்கர்க்கு திருமுறைப்பாடலும் ஓதுவார்மூலம் கற்பிக்கச்செய்து திருமுறை ஞானம் உண்டாக்குவதோடு, மதுரைப் பன்னிருதிருமுறைமன்றத் தலைவராகவும் இருந்து, திருமுறையைப் பரப்புவதில் தலைசிறந்து விளங்குவது திருமுறைவாணர் செய்த தவமாகும். இதுபோல மற்றவர்கட்கு வசதியும் வாய்ப்பும் இல்லை என்றாலும், திருமுறை ஞானத்தை நாள்தோறும் சில பதிகங்கள் பாராயணம் செய்து, வழிபடவருவார்க்கு பட்டாசாரியர் போல, தேவாரத்தை ஓதி தமிழ்த் தொண்டு செய்யலாம். இப்பணியில் முன்னோடியாய் இருக்கும் சிவஸ்ரீ ராஜப்பட்டர் அவர்களை தருமைக் குருமணியும், பனசை கயிலை மாமுனியும் பாராட்டிப் போற்றுவது வணக்கத்திற்குரியதாகும்.

குறள்வழியில் இல்லறம்

(கவிஞர். கா. கருப்பையா)

மதுரை என்றால் தமிழ்; தமிழ் என்றால் மதுரை - இது உலகறிந்த உண்மை.

"தமிழ்நிலைபெற்ற தாங்கருமரபில்
மகிழ்நனை மதுரை"

என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. "மாடமலிமறுகிற்கூடல்" என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. கொடிகட்டி ஆண்ட மதுரை - இலக்கியத்தில் சிறந்தது மதுரை. பண்பாடு போற்றிய மதுரை. திராவிடக் கட்டிடக் கலையின் சிகரமாக விளங்கிய மதுரை - அரசியல் எழுச்சிமிக்க மதுரை - சமய நல்லிணக்க மதுரை தூங்கா நகரமெனப் புகழ்பெற்ற மதுரை - பாங்குடனே பாசமுடன் மக்கள் வாழும் மதுரை கடம்பவன மரங்கள் நிறைந்த காடாயிருந்த மதுரையை சங்ககாலப் பாண்டிய மன்னன் குலசேகரன் என்பவன் கடம்பவனக் காட்டிலிருந்த ஒரு லிங்கத்தைச் சுற்றிக் கோவில் அமைத்ததாகவும் - அக்கோவிலைச் சுற்றி கோவில் அமைத்ததாகவும் - அக்கோவிலைச் சுற்றியுள்ள காடுகளை அழித்து மதுரை நகரை தோற்றுவித்ததாகவும் புராணச் செய்தி ஒன்று கூறுகிறது. அந்த மதுரையில்தான் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்தது. திருக்குறள் நூல் அரங்கேறியது.

அந்தத் திருக்குறளின் நெறிகளைப் பரப்புகிற பணியையும், திருக்குறள் நூலை உலகப் பொதுமறையாகக் கொண்டுவரும் பணியையும் திருக்குறளை வாழ்வியல் நூலாகக் கொண்டுவரவும் தான் உலகத் திருக்குறள் பேரவை பாடுபட்டு வருகிறது. திருவள்ளுவரின் குறள்நெறி பரப்பும் திருக்குறள் விழா ஆண்டு தோறும் நிகழ உலகத் திருக்குறள் பேரவை பாடுபட்டு வருகிறது. திருவள்ளுவரின் குறள்நெறி பரப்பும் திருக்குறள் விழா ஆண்டு தோறும் உலகத் திருக்குறள் பேரவை மதுரை கிளையின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. திருக்குறளை வழிபாட்டு நூலாகப் பார்க்காமல் வாழ்க்கைப் பயன்பாட்டு நூலாக ஆக்க அனைவரும் பாடுபடவேண்டும்.

1921ம் ஆண்டு செப்டம்பர் 20-22ல் மகாத்மா காந்தியடிகள் மதுரைக்கு வந்து மேலமாசி வீதியில் தங்கினார். அடிமைப்பட்ட இந்திய நாட்டின் குடிமக்கள் ஆடையின்றி பரிதவிக்கும் அவலநிலை கண்டு மனம் வெதும்பி, தன்னுடைய மேலாடையை களைந்து அரை நிர்வாணக் கோலம்

கொண்டார். பொதுப் பணிக்கும் மக்கள் பணிக்கும் வருபவர்கட்கு இந்த உணர்வும் செயல்பாடும் வரவேண்டும்.

"பிள்ளைதான் வயதில் மூத்தான்
பிதாவின் சொற்புத்தி கேளான்
தெள்ளற வித்தை கற்றால்
சீடனும் குருவைத் தேடான்
உள்ள நோய் பிணிகள் தீர்ந்தால்
உலகினர் பண்டி தரைத்தேடார்"

என்று விவேகசிந்தாமணி கூறுகிறது. இந்த நிலைகளை மாற்றத் திருவள்ளுவர் சரியான அறநெறிகளைக் கூறி 133 அதிகாரங்களில் 1330 குறள்களில் உலகத்தில் வாழுகின்ற எல்லா மக்களுக்கும் தேவையான எல்லா வழிகளையும் காட்டியுள்ளார்.

அறிவுடைமை, அன்புடைமை, அடக்கமுடமை, ஆள்வினையுடைமை, அருளுடைமை, ஊக்கமுடைமை, முதல் இல்வாழ்க்கை, இறைமாட்சி, இனியவை கூறல், கல்லாமை, கள்ளுண்ணாமை, வினைத் தூய்மை போன்ற அனைத்து விசயங்களையும் அலசி, ஆராய்ந்து தந்துள்ளார்.

வடமாநிலங்களில் உள்ள பள்ளிகளில் அடுத்த ஆண்டு முதல் திருவள்ளுவர் பிறந்ததினம் கொண்டாடப்படும் என்று மாண்புமிகு மத்திய அமைச்சர், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு ஸ்மிருதி இராணி தெரிவித்துள்ளார். ஒரு நாடு வளம்பெற வேண்டுமானால் அதில் பேசப்படும் மொழிகள் மற்றும் கலாச்சாரம் மதிக்கப்படவேண்டும். மிக முயன்று சேர்த்த பொருளெல்லாம் உதவிபெறத் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் – தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" (212)

அதேபோல ஒத்த பொதுநலத்தை அறிந்தவனே வாழ்பவன். அறியாதவன் செத்தவரைச் சேர்ந்தவன்.

"ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் – மற்றையான
செத்தாருள் வைக்கப்படும்" (214)

உலகநலம் விரும்பும் பேரறிஞனது செல்வம் ஊருணியில் நிறைந்த நீர் போலாகும்.

"ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு" (215)

ஏழைகளின் பெரும்பசியைத் தீர்ப்பது செல்வனுக்கு பெரும்

சேமிப்பாகும். இதைத்தான் திருவள்ளுவர்

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப்புழி" (226)

என்ற குறளில் கூறியுள்ளார். அதேபோல் கொல்லாதவனையும், புலால் உண்ணாதவனையும் எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்பதை

"கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" (260)

என்ற குறளில் விளக்கியுள்ளார் - மனமறியப் பொய் சொல்லாதவன் உலகத்தார் மனத்தில் எல்லாம் இருப்பான் என்பதை

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தர்
உள்ளத்தி லெல்லாம் உளன்".

என்ற குறளில் குறிப்பிட்டுள்ளார். கொடுமை செய்தவரைத் தண்டிப்பது எப்படி? அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மை செய்வதுதான் என்பதை

"இன்னா செய்தாரை ஒறுத்தல் - அவர்நாண
நன்னயம் செய்து விடல்" (314)

என்ற குறளில் கூறியுள்ளார்.

செல்வத்தைப் பெரிதாக எண்ணக்கூடாது அது வருவதும் போவதும் நாடகத்திற்கு மக்கள் வருவதும் போவதும் போன்றது. எந்த நேரமும் செல்வம் நம்மைவிட்டுப் போய்விடும் என்பது

"கூத்தாட்டு அவைக்கு புத்தாற்றே - பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று"

என்ற குறளின் கருத்தாகும்.

மனித வாழ்வில் ஊழைக் காட்டிலும் வலியது எதுவுமில்லை; எவ்வளவு பதுகாப்புத் தொடர்ந்தாலும் அது முந்திவிடும் என்பதை

"ஊழிற் பெருவலி யாவுள - மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்" (380)

என்றகுறளில் வலியுறுத்தியுள்ளார்.

இவைபோல பல வாழ்வியல் கருத்துக்களை முப்பாலிலும் எடுத்துச்சொல்லி, வாழ்க்கைக்குத் தேவையான இலக்கணங்களையும், மனிதநேயப் பொறுப்புகளையும் செய்யக்கூடியவை எவை

செய்யக்கூடாதவை எவை என்பதையும் ஒளிவு மறைவின்றி இந்த உலகுக்கு எடுத்துக்காட்டும் நூல் திருக்குறளாகும்.

நம் வாழ்வில் முக்கியமாக இருக்கிற எந்த உறவுகளையும் நாம் தேர்ந்தெடுக்கமுடியாது அம்மா, அப்பா, தம்பி, தங்கை, மகன், மகள் என அனைத்து உறவுகளும் நமக்குத் தாமாகவே அமைகின்றன - திருமணம் மூலமாகக் கிடைக்கும் வாழ்க்கைத்துணை என்ற உறவு மட்டும்தான் நாம் தேர்ந்தெடுப்பதாக இருக்கிறது. கணவன் மனைவி இருவரும் தம்முடைய வாழ்க்கைத் துணைமீது வைக்கிற நம்பிக்கைதான் உறவின் அஸ்திவாரமாகிறது - நம்பிக்கையற்ற திருமண உறவுகளின் ஆயுள்காலம் குறைவானது.

இல்லறத்தின் இரண்டாவது ஆணிவேர் ஒருவரை இன்னொருவர் புரிந்துகொள்ளும் தன்மை. நம்முடைய எதிர்பார்ப்புகளுக்குப் பொருத்தமாக இல்லை என்ற ஏக்கம் வந்துவிட்டால் இல்லறத்தில் இனிமை குறைந்துவிடும் - வேற்றுமையில் ஒற்றுமை காண்பது நாட்டிற்கு மட்டுமல்ல வீட்டிற்கும் அவசியம் - அகம் என்பதைக் காதலாகவும் புறம் என்பதை வீரம் உள்ளிட்ட சமூகவாழ்வாகவும் தமிழ்ச்சமூகம் வடிவமைத்துப் பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. இல்வாழ்க்கை என்பதே நமக்குக் காதல் நிரம்பிய அறம் ஆகும் - ஆண் பெண் உறவுகளில் நிலவும் ஒழுக்கத்தின் மூலமே உயர்ந்த நாகரீகம் உண்டாகும். அந்த நாகரீகத்தை உருவாக்க அனைவரும் பாடுபடவேண்டும்.

நமது பண்பாட்டின்படி பார்த்தால் பெண்கள் இயற்கையிலேயே தியாகிகள் என்று சொல்லலாம் - கணவன் வீட்டுக்கு வரும்போதே தாய், தந்தை, பிறந்தவீட்டுச் சூழ்நிலை எல்லாவற்றையும் துறந்துவிட்டுத்தான் வருகிறார்கள். திருமண வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன்பே துறந்துவரக்கூடிய ஒரு இயல்பு பெண்களுக்கு வந்துவிடுகிறது. இப்படி எல்லாவற்றையும் துறந்துவிட்டு இங்கே அன்புநாடி வந்த பெண்ணுக்கு ஆதரவு கொடுக்க வேண்டிய அவசியத்தை வள்ளுவம் வலியுறுத்துகிறது.

உலகத்திலே நட்பு மிகமிகச் சிறந்தது; பயனுடையது. அதிலும் கணவன் மனைவி நட்பு பற்றி சாதாரணமாகச் சொல்லிவிடமுடியாது. இருவருடைய வாழ்க்கை மேன்மையடையவும் குடும்பம் வளர்ச்சி பெறவும் இந்த நட்பே பிரதானமாகத் தேவைப்படுகிறது. கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் பாராட்ட வேண்டியது அவசியம் - இது அன்பையும், நட்பையும் இறுக்கமாக்கும் -

மனைவியின் நிறைவேறாத நீண்டநாள் ஆசைகளைத் தெரிந்து கொண்டு அதை நிறைவேற்றுங்கள். மனைவியின் உறவினர்களையும் பெற்றோரையும் மதிப்போடு நடத்துங்கள். மனைவியை உங்கள் பெற்றோரிடமும் உடன்பிறந்தவர்களிடமும் நெருங்கிய நண்பர்களிடம் கூட விட்டுக்கொடுக்கக்கூடாது.

மனைவி என்பவள் ஒரு தாயைப் போல அன்புசெலுத்த வேண்டும். தந்தையைப் போல தேவையான நேரத்தில் அறிவுரைகள் சொல்ல வேண்டும். உடன்பிறந்தவர்களைப் போல பாசம் காட்ட வேண்டும். மன்னித்து பெருந்தன்மை காட்டுவதில் இந்தப் பூமியைப் போல பொறுமையாகயிருக்கவேண்டும் - வேண்டிய பணிவிடைகளைச் செய்வதில் ஒரு பணிப்பெண் போல இருக்கவேண்டும். கணவனிடம் எதைச் சொல்லவேண்டும் எதை சொல்லக்கூடாது என்பதைத் தெரிந்து பேசிவந்தால் வாழ்க்கை இனிமையாகச் செல்லும் - கணவருக்கும் மனைவிக்கும் ஏதாவது பிரச்சினை என்றால் அதை அவர்களிருவருமே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

கணவன் மனைவி பிரச்சினையோடு குடும்ப பட்ஜெட் குழந்தைகளின் வளர்ச்சி வாழ்க்கையில் மேம்பாடு - உறவு முறைகளை ஒழுக்கமுடன் சீர்செய்தல் - சமுதாயத்தில் பங்கேற்பு போன்ற வளர்ச்சி மற்றும் நெறிமுறைகளைப் பற்றி சிறப்பாக எடுத்துக்கூறியிருக்கும் திருக்குறளை நமது வேதமாக உலகப் பொதுமறையாக மதித்து வாழ்வியல் நூலாகக் கொண்டுவர அனைவரும் பாடுபடுவோம்.

நயம்பாடி உலகத் திருக்குறள் பேரவையின் ஐம்பெருவிழா

14.01.21 அன்று நயம்பாடி, உலகத் திருக்குறள் பேரவையின் 41ஆம் ஆண்டு ஐம்பெரும்விழா நடைபெற்றது. காலை 7 மணியளவில் திருக்குறள் முற்றோதல் நடைபெற்றது. 10 மணியளவில் திருவள்ளுவர் படத்துடன் ஊர்வலம் நடைபெற்றது. மாலை நிறைவு விழாவிற்கு முனைவர். நயம்பு.அறிவுடைநம்பி தலைமை தாங்கினார். புலவர்.செ.பாபு அனைவரையும் வரவேற்றார். திருக்குறள் சான்றோர்க்கு விருதும், நூல்வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. நல்லாசிரியர் பு. புருஷோத்தமன் நன்றி நவில விழா இனிதே நிறைவேறியது.

தமிழால் முடியும்...!

(கவிச்சுடர். அழகுதாசன், கோவை)

✦✦ வெற்றிச் சிகரம் வான்போல் உயர
வேட்கை கொள்ளுங்கள்!
கற்பனைத் தேரில் நம்பிக்கை கொண்டு
கனவு காணுங்கள்!
குற்றமற்ற வாழ்க்கை வாழ
உழைப்பை மதியுங்கள்!
வெற்றி மலர்கள் மண்ணில் மலர
என்றும் உழையுங்கள்!

✦✦ பனைமரம் போல உயர்ந்து என்றும்
பயன்பட வாழுங்கள்!
தன்னை வளர்த்த தமிழை என்றும்
தாய்போல் பேணுங்கள்!
கனிபோல் இனித்து எவரும் நட்புறக்
கனிவாய்ப் பேசுங்கள்!
இனிமேல் நமக்குள் பகைமை வேண்டாம்
அன்பைக் கூட்டுங்கள்!

✦✦ "கற்க கசடற" நிற்க அதன்படி!
கனவிலும் மறவாதீர்!
உள்ளம் கோவில் உடம்பே ஆலயம்
உண்மை தவறாதீர்!
நல்ல எண்ணம் நம்மை உயர்த்தும்
கற்போம் தமிழ்நெறியே!
எல்லாம் நாம்பெறத் தமிழால் முடியும்
என்பதை அறியுங்கள்!

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

சிறப்புமிகு சேர்ந்திசை

(கலை மாமணி நெல்லை.ஆ. சுப்பிரமணியன்)



ஆண்களும், பெண்களும் கூடிப்பாடுவதே சேர்ந்திசை, கர்நாடக இசை, மெல்லிசை பண்மரபில் பதிகங்கள், பாசுரங்கள் என பலவாறான பெயர்களில் இசைமரபுகள் வளர்ந்தாலும் இதற்கெல்லாம் தொன்மையானது சேர்ந்திசை.

கிராமங்களில் நடவு, நாற்று பறிப்பு, உழவியல் செயல்பாடுகள், கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், குலவையுடன் திருமணம் மற்றும் மங்கல வாழ்த்துக்கள் முதலான பல அமைப்புகளால் சேர்ந்திசை பரவியுள்ளது.

ஆலயங்களில் காவடியாட்டம், வழிநடைச்சிந்து, கிறித்துவ தேவாலயங்களில் கூட்டு வழிபாடுகள். பள்ளிகளில் பிரார்த்தனை மற்றும் நன்னெறிப்பாடல்கள், பஜனைக் கூடங்களில் நாமாவளிகள், பஜன்கள், பிறதோத்திரங்கள் சேர்ந்திசையால் பரவசமூட்டும் மகிழ்வு.

பஜனை மடத்துத் தெரு என்ற பெயரை பல ஊர்களில் காணலாம்.

அமரர் பித்துக்குளி முருகதாஸ் போன்றவர்களால் எளிய மெட்டுகளில் யாவரும் பாடுவது பல காலமாய்த் தொடர்கிறது. அமரர் இராமநாதன், திவ்ய நாம சங்கீர்த்தனம் என்று கீர்த்தனங்களை குழுவினருடன் அரங்குகளில் பாடினார்கள். அமரர் எம்.பி. சீனிவாசன் அவர்களும் சேர்ந்திசையால் உயர்ந்து நிறைபுகழ் பெற்றார்.

பன்னிருதிருமுறைகள், திருப்புகழ், திருவருட்பாக்கள், திவ்யப் பரந்த பாசுரங்கள், தேவர் நாமாக்கள் முதலான இறையருட்பாக்களை குழுக்களாகவே இன்றும் பாடிவருகின்றனர். சமூக இலக்கிய விழாக்களில், தமிழ் வாழ்த்து, தேசியகீதம் முதலான இசைமரபுகள் பணிவோடு கூடிப்பாடும் விதத்தில் எளிமையாக அமைந்துள்ளன.

சேர்ந்திசையைப் பற்றி இன்னும் பல குறிப்புகளால் விவரிக்கலாம். சுருங்கக்கூறின், பயிற்சிகளின்றி யாவரையும் மனமொன்றிப் பாடச் செய்யும் இசை நெறியாய் விளங்குவது சேர்ந்திசை, எனவே எல்லாரும் பாடும் பழமையான சேர்ந்திசை மரபை பேணுவோம்! போற்றுவோம்! வாழிய சேர்ந்திசை!

கூட்டுறவே நாட்டுயர்வு

(கவிஞர்.முனைவர். குழிபிறை கஸ்தூரிநாதன்)

கூட்டுறவாய் வாழ்வதன் உயர்வு பற்றி
கொரோனாவால் இப்போது உணர்ந்து விட்டோம்
நாட்டுக்கு இன்றைக்கு அதிகத் தேவை
நல்லவர்கள் கூட்டுறவு ஒன்றே ஆகும்!
ஆட்டுவிக்கும் நோய்தன்னை எதிர்த்து நிற்க
அழிவுதரும் அறிவியலைத் தடுத்துக் காக்க
நாட்டுமக்கள் ஒற்றுமையாய்க் கூடி வாழ்ந்தால்
நன்மைபல உருவாகும் புரிந்து கொள்வீர்!

அப்பருடன் சம்பந்தரும் ஒன்று சேர்ந்து
ஆன்மீகம் வளர்த்திட்டார் என்ற உண்மை
எப்போதும் இதயத்தில் இருத்தி வைப்போம்!
எதிர்க்கின்ற பகைவிரட்ட ஒன்றாய் நிற்போம்
தப்பேதும் இல்லாமல் இணைந்து வாழ
தகராறு மதங்களுக்குள் இன்றி வாழ
இப்போது நாமெல்லாம் சேர்ந்து நின்று
இறைப்பணியை ஒற்றுமையாய்த் தொடர்ந்து செய்வோம்.

பெற்றவரை, பெரியவரை மதித்து வாழ
பிறமதத்தில் உள்ளவரை அணைத்து வாழ
கற்றவர்கள் மற்றவர்க்குச் சொல்லி வைப்பீர்!
கவலைகளை மனம்விட்டுத் தள்ளி வைப்பீர்
அற்றவர்க்கு உதவிடுவீர் கரங்கள் நீட்டி
அடுத்தவரைத் தழுவிடுவீர் அன்பு காட்டி!
சற்றுமிதை மறக்காமல் வாழ்வோம் என்றால்
சரித்திரத்தில் புகழடையும் நமது நாடு

நல்லவற்றை எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்
நாடுயர ஒன்றாக திரண்டு செல்வீர்!
அல்லவைகள் எதுவரினும் எதிர்த்து நிற்பீர்!
அனைவருமே ஒன்றென்று சபதம் ஏற்பீர்!
இல்லையென்ற பேச்சுக்கு இடமே இன்றி
இருப்பவர்கள் முன்வந்து கொடுத்து வாழ்வீர்
தொல்லையின்றி நம்நாடு உயர்ந்து நிற்க
தூயவர்கள் ஒற்றுமையாய்த் தொண்டு செய்வீர்!

காஞ்சிபுரம்
திருமுறை அருட்பணி அறக்கட்டளை நடத்தும்
17-ஆம் ஆண்டு கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பு

காஞ்சிபுரம் திருமுறை அருட்பணி அறக்கட்டளையின் சார்பில், 2021 மே மாதம் (03.05.2021 முதல் 12.05.2021) முடிய 10 நாட்கள் இலவச சைவ சமயப் பயிற்சி வகுப்பு, சின்ன காஞ்சிபுரம் திருமுறை அருட்பணி மாளிகையில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் சைவ சித்தாந்த நூல்கள் விரிவாகப் பயிற்றுவிக்கப்படும்.

கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் (அடிப்படைக் கல்வி தகுதி பெற்ற ஆண், பெண் இருபாலாரும் - 70 வயதுக்குள் உள்ளவர்கள்) விண்ணப்பிக்கலாம். ரூ. 5/- அஞ்சல்தலை ஒட்டிய, தங்கள் முகவரி எழுதிய உறையுடன் (4x9) கீழ்க்காணும் முகவரிக்கு கடிதம் எழுதி பயிற்சிக்கான விண்ணப்பமும், விதிமுறைகளையும் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏப்ரல் 15-ஆம் நாளுக்குள் வந்து சேரவேண்டும். பயிற்சி, உணவு, உறைவிடம் இலவசம். பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்கள் மட்டும் நுழைவுக்கட்டணம் ரூ. 200/- செலுத்த வேண்டும்.

தொடர்பு முகவரி :
சு. சதாசிவம்
நிறுவனர், திருமுறை அருட்பணி அறக்கட்டளை
எண்.7, பங்காரம்மன் தோட்டம்,காஞ்சிபுரம் - 631501
செல் : 9840638813

அடிபடும் பொழுதெல்லாம் பந்து மேலெழும்; பாம்பு சீறும். நிலம் உழும்பொழுதெல்லாம் செழுமையுறும். அதுபோலத்துன்பம் வந்துற்ற பொழுதெல்லாம் அழுது அழிந்து போகாமல் மேலும் மேலும் முயற்சியில் ஈடுபடுதல்வாழ்வியல் சார்ந்த உண்மை. போதிய அறிவின்மையாலும் பொருந்திய சூழலின்மையாலும் முன்பட்டறிவு இன்மையாலும் இடுக்கண் வருவது இயற்கை. தவிர்க்க இயலாதது. இடுக்கணைக் (துன்பத்தை) கண்டு நடுங்கி, அவலத்தை வளர்த்து அழுது அழியாமல் தொடர்ந்து அறிவறிந்த ஆள்வினையில் ஈடுபட்டுவெற்றி காண்பதே வாழ்க்கையின் நோக்கமாக அமைக்க வேண்டும். - அருள்நெறித்தந்தை

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதங்கள்

வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரிய மகாசந்நிதானம் திருமுன்பிற்குப் பணிவுடன் எழுதிக்கொள்வது

தைத்திங்கள் பிறந்த நல்ல நாளில் வெளிவந்த மக்கள் சிந்தனை கண்டு பெருமகிழ்வெய்தினன். ஆதீனத்தின் பொங்கல் சீர் பெற்ற மனநிறைவும் நினைப்புமாக இருந்தது.

இத்துடன் மயிலம் ஆதீன மாத இதழான "பாலசித்தர்" படி இரண்டு அனுப்பியுள்ளேன்.

தற்போது வந்த 2020 டிசம்பர் 2021 சனவரி மக்கள் சிந்தனையில் பக்கம் 16–இல் வெளியிட்டுள்ள மயிலம் ஆதீன வித்துவான் ஒருவர் பாடிய குன்றக்குடிக் குமரன் பாமாலையைப்பற்றிய குறிப்பை 23.1.2021ல் நடந்த கிருத்திகை கூட்டத்தில் நான் பேசியதோடு மகாசந்நிதானம் திருமுன்பிற்கும் மக்கள் சிந்தனையைக் காட்டினேன்.

பெருமகிழ்வெய்தி வாழ்த்தியதோடு மடாலய அலுவலரிடம் நகல் எடுத்துக் கோப்பில் வைக்க உத்தரவளித்தார்கள்.

நானும் எண்ணினேன்; குன்றக்குடியிலிருந்து நேரே மயிலம் மடத்திற்கு ஒரு மக்கள் சிந்தனையை அனுப்பச் சொல்லலாம் என்று – ஆதீனக் கவிஞர் பெருந்தகை மரு. பரமகுரு அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்தேன். மேலும் பாலசித்தர் இதழையும் அனுப்புவதாகக் கூறியபடி அனுப்பிய பாலசித்தர் இதழ் ஒன்றினை மகாசந்நிதானம் கொண்டருள வேண்டினேன். மற்றது ஆதீனக் கவிஞர்க்காகும்.

கூட்டத்தில் மயிலம் சந்நிதானம் மக்கள் சிந்தனையில் வந்த குன்றக்குடி மாலையின் குறிப்பையும் கூறியருளினார்கள்!

– தெ. முருகசாமி,புதுச்சேரி.

திருப்பெருந்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகட்குக் க.கதிரேசன் வணக்கங்கள் பற்பல.

சில திங்களாக நம் மக்கள் சிந்தனை இதழ் வராமையால் இந்தக் கொரானா காலத்தில் சமூகம் ஆற்றிய சமூகத் தொண்டுகள் பற்றி அறிய வாய்ப்பில்லாமல் போயிற்று. யாரை? எப்படிக் கேட்டு அறிவது என்பதிலும் மன ஊசலாட்டம். நம் மக்கள் சிந்தனை கிடைத்தது.

படித்துப் படித்து மகிழ்ந்தேன். இச்செய்திகள் பிற்காலத்தில் வரலாறாகும் சிறப்புடையன.

நம் திருமடத்தின் மீதும் தங்கள் மீதும் பற்றும் பாசமும் கொண்ட அன்பர்கள் மறைவுபற்றிப் படித்தபோது மிகவும் வருந்தினேன். அவர்களின் ஆன்மா சாந்தியடைய அருள்தரு சண்முகநாதப் பெருமானை அருளுமாறு வேண்டினேன்.

அவ்விதத்தில் ஊருணிகள் கண்மாய்கள் நிரம்பியுள்ள செய்தியை நண்பர் முத்தையன் அவர்கள் மூலம் அறிந்து மகிழ்ந்தேன்.

சமூகம் இப்பகுதிக்கு எழுந்தருளும்போது வந்து கண்டு மகிழ்வேன்.

திருவடிகட்கு வணக்கம். – க. கதிரேசன், பூவாளூர்

தவத்திரு அடிகளார் குருவடிகளே சரணம்.

பல திங்கள்கள் வாராதிருந்த "மக்கள் சிந்தனை" மீண்டும் வெளியாகி கிடைக்கப்பெற்றது, ஆறுதலும் மகிழ்வும் தந்தது.

– நெல்லை. ஆ. சுப்பிரமணியன்

இதழ் கிடைத்தது. நீண்ட காலம் வராத குறையைப் போக்கும் விதமாக பல முக்கிய செய்திகளை உள்ளடக்கி உவகை ஊட்டியது. அடிகளார் பங்கு பெற்ற நிகழ்வுகளின் படங்கள் அகரம் – உவமை விளக்கம் அய்க்கண் அவர்களின் நினைவேந்தல் செய்திகள் என எல்லாப் பக்கங்களும் மனதைத் தொட்டன.

– வீ.கே. கஸ்தூரிநாதன்

படிப்புக்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் முரண்பாடு இருக்கிறது. இதைப்பார்த்துத்தான் பாரதி ஆவேசப்பட்டான். படித்தவன் சூது பண்ணினால் போவான், போவான்... ஐயோ என்று போவான் என்று சபித்தான். திருவள்ளுவரும் வருத்தப்பட்டார் . எப்படி? யார் முட்டாள்? ஒன்றும் தெரியாதவன் முட்டாளல்ல: தெரிந்தும் தவறு செய்கிறானே... அவன்தான் முட்டாள்; முட்டாள்களின் முட்டாள் என்றார் திருவள்ளுவர். கற்றவன், கற்றதைக் கேட்டவன், கேட்டதைச் சிந்தித்தவன், சிந்தித்ததன் பாதையில் செயல்பட மறுக்கிறவன்தான் சமூதாயத்துக்குத் தீமை செய்கிறவன். அவன்தான் பேதைகளின் பேதை என்று முத்திரை குத்துகிறார். *– தவத்திரு பொன்னம்பல அடிகளார்*

குட்டிபோட்ட அட்ட நாகங்கள்

சொ. அருணன்
(முனைவர் பட்ட மேலாய்வாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி)

தமிழ் இலக்கிய வரலாற்றில் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. கபிலரையும் பாரியையும் போல, கோப்பெருஞ் சோழனையும் பிசிராந்தையாரையும்போல, சங்ககாலம் தொடங்கி அரசரும் புலவருமாக இணைபிரியாது விளங்கிய நல்லுறவின் தொடர்ச்சி நம்காலம் வரையிலும் தொடர்ந்திருக்கிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் முன்னணி வீரர்களாகக் களம் கண்ட மருதுபாண்டியர் வரலாற்றிலும் அப்படி புலவர் ஒருவர் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

இராமநாதபுர சமஸ்தான வித்வானாக விளங்கியவர் சிறுகம்பையூர் சர்க்கரைப் புலவர். இவர் ஒருமுறை மருதுபாண்டியர் கொடைப்பணிக்காக, கலியநகரி என்னும் ஊருக்கு வந்திருந்தபோது மன்னரை தரிசிக்க விரும்பினார். அப்போது மன்னரிடம் தருவதற்காக "அட்டநாக பந்தம்" என்னும் சித்திரக் கவியை இயற்றி வைத்துவிட்டு சிவபூஜை செய்யச் சென்றார். அவ்வேளையில் அவருடைய இளங்குழந்தையாகிய சாந்துப்புலவர் தந்தையின் அட்டநாக சித்திரக் கவியைப் பார்த்ததும் தானும் அதுபோல் ஒரு சிறிய அட்டநாகச் சித்திரத்தை வரைந்து தந்தையின் ஏட்டோடு சேர்த்துவிட்டார்.

இதைக் கவனிக்காத சர்க்கரைப் புலவர் அவற்றை எடுத்துக்கொண்டு மருதுபாண்டியரைக் காண்பதற்கு கலியநகரிக்குச் சென்றார். மருதுமன்னரைக் கண்டு செய்யுளைக் கூறி, பொருளை விளக்கிவிட்டு அந்த ஏட்டைத் தந்தார்.

அதை வாங்கிப் பார்த்த மன்னர், கவிஞரே, நீங்கள் வரைந்த அட்டநாகங்களும் குட்டி போட்டுள்ளனவே? என்றார்.

இது தன் குழந்தையின் செயல்தான் என்று சர்க்கரைப் புலவருக்குப் புரிந்தது. அதை மன்னரிடம் சொன்னவுடன், மன்னர் வியந்து அந்தக் குழந்தையை அழைத்து வரும்படி சிவிகையோடு சிறுகம்பையூருக்கு ஆட்களை அனுப்பினார்.

தந்தையாகிய சர்க்கரைப் புலவர் தான் போய் அழைத்து வருவதாகக் கூறியும் மன்னர் ஒத்துக்கொள்ளவில்லை. அந்தக் குழந்தை வந்தவுடன் அவனைக் கட்டித்தழுவி, "இந்த ஏட்டில் குட்டி நாகம் வரைந்து பாட்டெழுதியவர் யார்" என்று கேட்டார் மன்னர்.

"குழந்தையோ, "எழுதியவன் யானே" என்று பதில்கூற, மன்னர் மகிழ்ந்து போய்ப் புலவரிடம், "இன்றிலிருந்து குழந்தை என்னிடமே இருக்கட்டும்" என்று ஆணையிட்டார். இதைக் கேட்டு திகைத்துப் போன புலவர், "இலக்கண, இலக்கியங்களையெல்லாம் கற்றுத்தந்து, பின்னர் தானே கொண்டு வந்து அவரிடம் சேர்ப்பிப்பதாய்க் கூறியும் மன்னர் மறுத்து "குழந்தை இப்பொழுதே பெரும் புலவர்தான். மேலும் கற்பிக்க விரும்பினால் நீங்களும் உடன் வந்து இருக்கலாம். இல்லாவிடில் இங்குள்ள வித்துவான்களைக் கொண்டும் கற்பிக்கச் செய்கிறேன்" என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

அரசாணைக்கு மறுப்பேது? விசுவாமித்திர முனிவரின் கரத்தினில் ராமனை ஒப்படைத்த தசரதனைப்போல, கலக்கமுற்று ஊர் திரும்பினாராம். அன்றிலிருந்து "அரண்மனைக் குழந்தை" என்ற பெயர் ஏற்பட்டது. "குழந்தை என்று குறிப்பிட்டபோதும் அப்போது அந்தக் குழந்தைக்கு வயது பதினாறு. அந்தக் குழந்தைதான் பின்னாளில் நிமிடத்திற்குள் பல சித்திரக்கவிகளை இயற்றக்கூடிய – நாவன்மையுடைய புகழ்பெற்ற சாந்துப் புலவரானார். மருதுபாண்டியர் அவையில் புலவர்கள் பலர் திகழ்ந்தபோதும் அவர்களுக்கெல்லாம் திலகம் போல விளங்கியவர் சாந்துப் புலவர்தான். குட்டி அட்ட நாகங்களை வரைந்து மன்னர் மனத்தில் இடம் பிடித்தவர். மருதுமன்னரின் கவசம்போல இருந்து அரசவை காரியங்களை நிருவகித்து வந்தவர் சாந்துப் புலவரே ஆவார்.

மருது பூபதிக்குப் பிளவை நோய் ஏற்பட்டபோது, காடன் செட்டியார் என்பவர் குன்றக்குடி முருகனை வேண்டியபடி அந்நோய் தீர்ந்தது. அதனால் மருதுமன்னர் குன்றக்குடி முருகப் பெருமானுக்குத் திருப்பணிகள் பல செய்து அத்தலத்தை சீரமைத்தார். கற்கோட்டங்கள் போதாது என்று கருதிய மன்னர் சாந்துப் புலவரை சொற்கோட்டம் அமைக்கச் சொன்னார். அதனால் குன்றக்குடிப் பெருமானை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு "மயூரகிரிக் கோவை" என்னும் அரிய காவியம்

தோன்றியது. அதன் வழியாகவே மருதுபாண்டியரின் பெருஞ்சிறப்புகளும் கொடைத் தன்மைகளும் இலக்கியப் பதிவாகியுள்ளன.

அதனோடு சேர்த்து அக்காலத்துக் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்து விளங்கிய சங்கரலிங்க முனிவருடைய பெருமைகளையும் அறியமுடிகிறது. மருது மன்னர் வெள்ளையர்களோடு போரிட்டபோது தானும் அந்தப் போர்களில் ஒரு தலைவனாய் நின்று வீரத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். பின்னர் அவர்கள் கொடுந்தண்டனைக்கு ஆளாகி வீரமரணம் அடைந்த பின்னர் அவருடைய சுற்றத்தாரெல்லாம் நாடு கடத்தப்பட்டனர்.

தன் மகனைப் போலவே கருதி வளர்த்த சாந்துப் புலவர், அவர்களைவிடவும் துன்பம் அதிகமுற்று பிரிவாற்றாது ஒருவாரத்திற்குள் சிறுகம்பையூரில் தன்னுயிரை நீத்தார். சாந்துப் புலவரின் "மயூரகிரிக் கோவை" நூலை அவர் மரபில் தோன்றிய சர்க்கரை இராமசாமிப் புலவர் பதிப்பித்த வேளையில், சாந்துப் புலவரின் இத்தகு அருங்குணத்தைப் போற்றி, பிரபுலிங்கலீலையில்உள்ள பின்வரும் பாடலோடு பொருத்திக் காட்டியிருப்பது சிறப்பாக அமைகிறது.

"காணுத லொழிக நல்லார்க்
 காணினங் கவர்பா னட்புப்
பேணுத லொழிக பேணிற்
 பிரிவுற லொழிக வுற்றால்
மாணுயி ருடம்பில் வாழும்
 வாழ்க்கைபோ யொழிக வென்னா
ஊணிடு மொருதாய் நீத்த
 பார்ப்பென வுளங்கு லைந்தார்" (கோரக்கர்கதி-4)

தன்னை வளர்த்த தந்தை போலான மருதுமன்னரை மரணத்திலும் பிரியாது அணைந்துகொண்ட சாந்துப் புலவர் சங்கப் புலவர்கள் பலரையும் நினைவுபடுத்துகிறார்தானே!

வாழ்க்கையை அளந்து பயன்பாடு கொள்வதற்குரிய கருவி காலமேயாம். காலத்தை வீணடிப்பது வாழ்க்கையையே பாழாக்கிவிடும். காலமறிந்து கடமைகளைச் செய்தல் வெற்றி பொருந்திய வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.உரிய காலத்தைத் தேர்ந்து செய்யப்பெறும் காரியமே முழுப்பணனைத் தரும்.

– அருள்நெறித்தந்தை

சர்.சி.வி. இராமனின் "டர்பன்" ஏன்?

(கவிவேந்தர் கா.வேழவேந்தன்)



ஒளிக்கற்றை ஊடுருவும் போதில் தோன்றும்
ஒப்பரிய விந்தையெல்லாம் ஆய்ந்தே சொன்னார்
தெளிவுமிகு சர்.சி.வி. இராமன் தானே!
திருச்சிதந்த தமிழ்மகனாம் அன்னோ ருக்குக்
களிப்புடனே உலகறிஞர் ஒருங்கே கூடிக்
கவின்"நோபல்பரி" சளித்தே போற்றி னார்கள்!
அளப்பரிய இயற்பியலின் நுணுக்க மெல்லாம்
அச் செம்மல் மாணவர்க்கே புகட்டி நின்றார்.

இந்தியமண் அறிவியலில் ஏற்றம் காண
எண்ணியவர் ஆய்வுமையம் கண்டார்; நுட்பச்
சிந்தனைகள் ஒளிர்வதற்கே இதழ்ந டத்திச்
செம்மாந்த புகழ்குவித்தார். ஒருநாள் காலை
வந்ததொரு மாணவனும் கேட்டான் : தாங்கள்
வனப்புடனே அணிந்திருக்கும் "டர்பன்" தன்னால்
சொந்தமுள்ள இருசெவியும் மூடியுள்ளீர்!
சொல்லுங்கள், ஏன்?" என்றான். அறிஞர் சொன்னார்:

"மற்றவர்கள் புகழ்ந்துரைக்கும் சொற்கள் கேட்டால்,
மயக்கம்வரும்; மிதப்புவரும் தவிர்க்க!" என்றார்
"சுற்றியஅத் தலைப்பாகை தனைஇ றுக்கிச்
சூடியுள்ள காரணமேன்?" கேட்டான் சீடன்!
"வெற்றுரையால் தலைகனத்தே என்றன் மண்டை
வீங்கிவிடக் கூடாதே! அதனால்!" என்றார்.
கற்றறிந்த மேதையவர் விளக்கம் கேட்டுக்
கண்கலங்க விடைபெற்றான் அந்தச் சீடன்!



பழ. தரும ஆறுமுகச் செம்மலை
அஞ்சலி செய்வோம்!

(மரு. பரமகுரு)

கோவைச் சரவணம் பட்டியிலே
குணங்களில் சிறந்ததோர் ஆறுமுகப்
பூவொன்று பூத்து மணந்தது, அந்தப்
புண்ணியப் பூவின்று உதிர்ந்தது!
நாவு மலர்ந்துஅது சொன்னது - சில
நாட்களுக்கு முன்னர் ஓர் சொல்லது
சாவது பற்றிக் கவலையில்லை - மிகச்
செம்மையாய் என்னுயிர் உள்ளது.
இறைவன் அழைக்கையில் போய்விடுவேன் - உடல்
என்றும் நிலையான தல்லவே!
குறைகளும் இல்லை; மனம் நிறைவு - அவன்
கூப்பிட்டு விட்டால் நான் போய்விடுவேன்
என்றந்த ஞானம் பொழிந்தது என்
இருசெவி பொத்திக் கலங்கினேன்
இப்படிச் சொன்னவர் ஆறுமுகம்
இன்று மறைந்தவர் சென்றுவிட்டார்
இருவினை ஒப்புஅவர் எய்திவிட்டார்
இறைவனடிமலர் சேர்ந்துவிட்டார்.
கைகள் சிவக்கப் புலிருக்கும்
கவிஞர்க்கும் ஈந்த கருணைவள்ளல்
மெய்ம்மை உணர்ந்து திருமடங்கள்
மேன்மைபெறப் பலதொண்டு செய்தோர்
ஐயன் திருவடி சேர்ந்தபடி
தரும ஆறு முகம் போல்வார்
வையத்தில் தோன்று வார்அரிது. அந்த
மாட்சிமை யான்வழி ஆயிரம்பேர்
தெய்வ அருளினால் தோன்றிவிட்டால்
தேசங்கள் யாவுமே மேன்மையுறும்
கைகுவித்து ஆறுமுகச் செம்மலை
கண்மூடி அஞ்சலி செய்திடுவோம்!

———

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி
மக்கள் சிந்தனை
குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி





இடது : தமிழக அரசு உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு அர. சக்கரபாணி அவர்களுக்கு குருமகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்தியபோது...

வலது : தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்த போது...



தமிழக அரசு தலைமைச் செயலர் முனைவர் திருமிகு. வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தபோது...

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Feb 2021 - June 2021
Date of Publication 22-06-2021
Price Rs. 8-00

C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி





குன்றக்குடி ஆதீனத்தின் சார்பில் ரூ.2 லட்சம் மதிப்புள்ள இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டி இயந்திரங்கள் தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு. கே. ஆர் பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. மதுசூதன் ரெட்டி அவர்கள் முன்னிலையில் காரைக்குடி அரசு பொது மருத்துவமனைக்கு குருமாகசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் வழங்கினார்கள்.

அச்சிட்டோர் : சன்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ☎ : 9443590288